

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.8.2023) முகாம் அலுவலகத்தில், ஓய்வு பெற்ற காவல்துறை இயக்குநர் ப. கந்தசாமி, சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) மேலாண்மை ஆய்வுத் துறையில் பேராசிரியராக பணிநியமனம் பெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.8.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 227 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் 84 நபர்களுக்கும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தில் 10 நபர்களுக்கும், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் 130 நபர்களுக்கும், என மொத்தம் 451 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தஞ்சை மாவட்டத்தில் வாகனத் தணிக்கையில் வாகனம் மோதி

# உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 5-

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாகன தணிக்கையின் போது இரு சக்கர வாகனம் மோதி உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், மெலட்டூர் காவல் நிலைய தலைமைக் காவலர், பழனிவேல் (வயது 38) நேற்று முன்தினம் (3.8.2023) மாலை உதவி ஆய்வாளர் தலைமையில், குருங்களூர் வெண்ணாற்றுப் பாலம் அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவர் மீது கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் நோக்கிச் சென்ற இருசக்கர வாகனம் மோதியதில் காயமுற்று சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இரவென்றும் பகலென்றும் பாராமல், தம் குடும்பத்தினரையும் மறந்து, நம் காவல் துறையினர் கடமையாற்றி வருகின்றனர். அந்தவகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வந்த தலைமைக் காவலர் பழனிவேல் அவர்களின் அகால மரணம் காவல் துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

உயிரிழந்த தலைமைக் காவலர் பழனிவேல் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு, இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கொளத்தூர் 68 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன்மணி தந்தை

# கோட்டைபெருமாள் திருவுருவப் படம்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்!

## மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஆக. 5

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி, 68 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன்மணி தந்தை கோட்டை பெருமாள் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (5.8.2023 சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, எண். இ.329, 12 ல், 2 வது குறுக்கு தெரு, பெரியார் நகர், (பெரியார் நகர் சிவவிஷ்ணு கோயில் அருகில்) நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு திருவுருவப் படத்தினை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சரிதா மகேஷ்குமார், தேவஜவகர், சி.மகேஷ்குமார், டி.லோகேஷ், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைக்கண்ணன், பி.அமுதா, ம.அசோக்குமார், பி.பழனி, இள.இளங்கோவன், எம்.தாவூத்பி, எஸ்.கே.இரமேஷ், எல்.டி.தாமஸ், பி.டி.சி.ரவி, டி.சந்திரசேகர், ப.அன்பரசு,

பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், ந.பொன்முடி, சி.ஸ்ரீதனி, எஸ்.யோகபிரியா, கே.சாரதா, கே.பலராமன், எஸ்.பாலமுருகன், கே.ரமேஷ், அற்புதமேரி, பாலாஜி, ஜெ.பிரான்சிஸ், டி.சிவனேசன், என்.வெங்கடேஷ்பாபு, ஆர்.சண்முகம், எஸ்.தட்சிணாமூர்த்தி, டி.ஜீவானந்தம், என்.தனசேகர், பொன்.புகழேந்தி, எஸ்.விஜயன்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவாலங்காடு ஒன்றியம் தும்பிகுளம் கிராமத்தில் தமிழக அரசின் கால்நடை சிறப்பு முகாம் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து கால்நடைகளில் வளர்ச்சி பராமரிப்பு உள்ளிட்ட வகைகளை பார்வையிட்டார். உடன் கால்நடை பராமரிப்புத்துறை கோட்டை உதவி இயக்குனர் டாக்டர் தாமோதரன், ஒன்றிய கழகச் செயலாளர்கூளூர் எம்.ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் விஜயகுமாரி சரவணன் ஊராட்சி மன்ற தலைவர் நிர்மலா கோபி, உள்பட அரசு அதிகாரிகள் கால்நடைத்துறை மருத்துவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான

# மாநில ஆணையத்திற்கு உறுப்பினர் நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக. 5-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாது காக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினை களுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படுத்தும் வகையில் உருவாக்கிட உரிய சட்டம் இயற்றப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி எண் 110ன் கீழ் அறிவிக்கப்பட்டு அதற்கான உரிய சட்டமும் இயற்றப்பட்டது (தமிழ்நாடு சட்டம் 17/2021). இச்சட்டம் 13.10.2021 முதல் அமலுக்கு வந்தது.

இவ்வாணையம் நீதியரசர் பி.ஆர்.சிவகுமார், சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிற நிலையில் தற்போது காலியாக உள்ள ஒரு உறுப்பினர் பணியிடத்தில் திருமதி ஜெ.ரேகா பிரியதர்ஷினி அவர்களை நியமனம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், புதியதாக நியமனம் செய்யபட்ட உறுப்பினரின் பதவி காலம் மூன்று ஆண்டுகள் ஆகும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

### சென்னை வடகிழக்கு மாவட்ட

# பகுதி, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் அடங்கிய பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன் தலைமையில் இன்று (05.08.2023, சனிக்கிழமை) பகல் 12.00 மணியளவில் மாதவரத்திலுள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் கீழ்காணும் பொருள் குறித்து பேச இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாள் பேரணி, கலைஞர் நூற்றாண்டு பொதுக் கூட்டம் விழா ஆலோசனை மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

மாதவரம் **எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கிண்டி எம். கோபால்
### ஆகஸ்ட் 5 (1985)



இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.

1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை 'கிண்டி கோபால்' என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.

சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மணிப்பூர் வன்முறைச் சம்பவத்தால்

# 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் படிப்பு பாதிப்பு!

## ஒன்றிய அரசு தகவல்!

புதுடெல்லி, ஆக. 5 -

மணிப்பூர் வன்முறைச் சம்பவம் காரணமாக, 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்று, ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் டோலா சென் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் அன்னப்பூர்ணா தேவி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ளார்.

அதில், மணிப்பூர் வன்முறை காரணமாக, 14 ஆயிரத்து 763 மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாக தெரிவித்தார்.

முகாம்களில் உள்ள பள்ளி மாணவர்களில் சுமார் 93 சதவீதம் பேர் அவர்கள் தங்கியுள்ள இடத்துக்கு அருகில் உள்ள பள்ளிகளில் சேர்ந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

# வட்டக் கழக செயலாளர்கள் கூட்டம்!

## மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வட்ட கழக செயலாளர்கள் கூட்டம் பகுதி அவை தலைவர் எம்.ஆர்.ஜம்புலிங்கம் தலைமையில் இன்று (5-8-2023, சனிக்கிழமை), காலை 10:00 மணிக்கு சென்னை 18 தேனாம்பேட்டை இளங்கோ சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மா.பா.அன்புதுரை**, செயலாளர்,
ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி திமுக

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி
### ஆகஸ்ட் 5 (1971)



திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். 'நடிப்பிசைப்புலவர்' என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.

தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

"பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**